**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**

**இரண்டாம் ஆண்டு – மூன்றாம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)**

**ஜனவரி– பிப்ரவரி 2020**
**A021 இலக்கணம் – 2 (சொல்)**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. கிளவி என்பதன் பொருள் யாது?
2. திணை எத்தனை வகைப்படும்? அவை யாவை?
3. தொழிற் பெயர் எவ்விடத்திற்கு உரியது?
4. கருவிப் பொருள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
5. தற்கிழமை என்றால் என்ன – சான்று தருக.
6. இன்றைய பேச்சு வழக்கில் மிகுதியாக வழங்கப்பெறும் தன்மை ஒருமை விகுதி யாது? சான்று தருக.
7. வியங்கோள் வினை எவ்வெவ் பொருள்களில் வரும்?
8. படர்க்கை ஆண்பால் வினைமுற்றுகளில் வரும் விகுதிகள் யாவை?
9. காலம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
10. ஓரெழுத்து ஒரு மொழி என்றால் என்ன?

11. சாரியை எத்தனை வகைப்படும்? அவை யாவை?
12. உவம உருபுகள் யாவை?
13. ஒரு குணம் தழுவிய உரிச்சொல் என்றால் என்ன?
14. தொகை என்றால் என்ன?
15. திணைகள் மயங்குவதற்கான காரணங்கள் யாவை?

### பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. மூவிடப் பொதுப் பெயர் என்றால் என்ன?
2. ஆகுபெயர் – குறித்து எழுதுக.
3. வேற்றுமை என்றால் என்ன? விளக்க ம் தருக.
4. குறிப்பு வினை – விளக்குக.
5. முற்றெச்சம் – குறிப்பு வரைக.
6. உரிச்சொல் என்றால் என்ன? எடுத்துக்காட்டுத் தருக.
7. பண்புத் தொகை – குறித்து எழுதுக.
8. விடைகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

### பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) பெயர்ச் சொல்லின் வகைகள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) வினையாலணை பெயரும் அதன் வகைகள் குறித்தும் விளக்கி வரைக.

2. (அ) கால மயக்கம் என்றால் என்ன? விளக்குக.

(அல்லது)

(ஆ) காலம் காட்டும் இடைநிலைகள் குறித்து எழுதுக.

3. (அ) உரிச் சொல்லின் இலக்கணமும் வகைகளும் குறித்து விளக்குக.

(அல்லது)

(ஆ) பொருள்கோள் என்றால் என்ன? அதன் வகைகளை எடுத்துகாட்டு தந்து விளக்கி வரைக.

❋❋❋